CC .No. 91/2021
நாள் – 17.03.2026.

பு.சா.1 – திரு. மரியதாஸ் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )

(எதிரி ஆஜர்).

நான் முத்தழகு பட்டியில் 50 வருடமாக வசித்து வருகிறேன். அதே பகுதியில் வசித்து வரும் சூசை ராபர்ட் என்பவரை தெரியும் என்றால் சரிதான். உடன் பிறந்த சகோதரர். நான் பேரிங் இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். 25 வருடமாக மேற்படி தொழில் செய்து வருகிறேன். நான் தொழில் வரி செலுத்திவருகிறேன். மாதம் சுமார் ரூ.20 முதல் 30 ஆயிரம் வரை வருமானம் வரும். நான் வருமான வரி செலுத்திவருகிறேன். வருமானவரி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தவில்லை என்றாலும் அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சீலப்பாடி சுப்பரமணியபுரத்தில் குடியிருந்து வருகிறார். எவ்வளவு காலம் வசித்து வருகிறார் என்றால் அதைபற்றி தெரியாது. எதிரியை பணம் வாங்குவதற்கு முன்பு 4,5 வருடமாக தெரியும். எதிரி RMTC யில் டிரைவர் வேலை பார்த்து VRS பெற்றுள்ளார். RMTC யில் எந்த டிப்போவில் வேலை பார்த்தார் என்றால் தெரியாது. VRS எந்த வருடம் கொடுத்தார் என்றால் தெரியாது. எதிரியை குடும்ப ரீதியாக தெரியாது என்றால் சரிதான். எதிரியை தொழில் ரீதியாக மற்றும் கொடுக்கல் வாங்கல் ரீதியாக தெரியும். நான் பொருட்களை வாங்குவதற்காக எங்குளங்கு உள்ளது என எதிரி தகவல் சொல்வார். எதிரி இரும்பு கடை வைத்திருந்தாரா என்றால் இல்லை. எதிரியின் குடும்ப விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். அவருடைய சொத்து மற்றும் வருமான விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். எதிரி என் வீட்டில் வைத்து பணம் கேட்டார். எதிரி எவ்வளவு பணம் கேட்டார் என்றால் ரூ.9 இலட்சம் கேட்டார். 03.09.2020 அன்று கேட்டு பணத்தை வாங்கிகொண்டார். காலை 11,12 மணிக்கு வந்து கேட்டார். நான் உடனே

பணத்தை கொடுத்துவிட்டேன். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு வேறு கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. 03.09.2020 அன்று முதல் முறையாக கேட்டாரா என்றால் ஆமாம். அந்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் நான் வியாபாரம் செய்து வைத்திருந்த பணம். புகார் அறிவிப்பு மற்றும் பிரமான வாக்குமூலத்தில் பணம் எவ்வாறு வந்தது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது புகார் மற்றும் பிரமாணவாக்குமூலம் காட்டப்பட்டு கேட்கப்பட்டது சாட்சி தற்போது இல்லை என குறிப்பிடுகிறார். 03.09.2020 அன்றே காசோலையை கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த காசோலையில் தேதி மற்றும் கையெழுத்து போட்டு கொடுத்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காசோலையில் தேதி மற்றும் கையொப்பம் ஒரு மையாகவும் நிரப்பப்பட்ட பகுதிகள் வேறு ஒரு மையாகவும் உள்ளது என்றால் சரிதான். நான் நிரப்பினேன். தேதி மற்றும் கையொப்பம் எதிரியினுடையது. 22.10.2020 அன்று பணத்தை திருப்பி பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி காசோலையை ஒப்புதலுக்காக கொடுத்தார் என்றால் சரிதான். நான் போன் செய்து கேட்டேன் நேரில் சென்று கேட்கவில்லை. புகார் மற்றும் அறிவிப்பில் நான் நேரில் சென்று கேட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் மாலை நான்கு மணிக்கு சென்று கேட்டேன். அதன்பிறகு தான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பேங்க் ஆப் பரோடா வங்கியில் எனக்கு கணக்கு உள்ளது. எனது வீட்டிற்கும் அதற்கும் 3 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். நான் காசோலையை பேங்க் ஆப் பரோடா வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 10, 11 மணியளவில் தாக்கல் செய்தேன். 22.10.2020 அன்று தாக்கல் செய்தேன். பணம் இல்லை என சொல்லி திருப்பப்பட்டது. 23.10.2020 அன்று தெரியவந்தது. அதன்பிறகு 5 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டோம். எதிரியின் வங்கி காசோலை ICICI வங்கி கிளைக்குறியது. காசோலை எண். 100708. ICICI வங்கி சாலை ரோடு, மெயின் பிரான்ச் கிளைக்குரியது. இந்த வழக்கை நான் என் தம்பி சொல்லித்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. எனக்கு எதிரியை தெரியாது என்றாலும் அதனால்தான் அவருடைய குடும்ப விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனது தம்பிக்கும் தான் பரிவர்த்தனை இருந்தது என்றாலும் ரூ.1 இலட்சம் எதிரி கடனாக பெற்றிருந்தார் என்றாலும் அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் என்றாலும் சரியல்ல. எதிரி மேற்படி ரூ.1 இலட்சத்தை எனது தம்பிக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் கசோலையை திரும்ப கேட்டும் தராமல் என்மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியை தெரியாது என்பதால் தான் அவர் எங்கு எந்த டிப்போவில் வேலை பார்த்தார் என தெரியவில்லை என்றாலும் அவரது சொத்து மற்றும் வருமான விவரங்கள் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி எதிரி எந்த காலத்திலும் எந்த நேரத்திலும் என்னிடம் பணம் ஏதுவும் வாங்க வில்லை என்றாலும் அதற்காக காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த காசோலை மோசடி வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.03.17 13:20:36 +0530

Judicial Magistrate No.I
Dindigul.